தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில்

சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம்

## வேலை வாய்ப்பு கோரும் அறிவிப்பு

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் அமைக்கப்படவுள்ள முதலுதவி மையத்தில் மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர் பதவிகளில் நியமனம் செய்வதற்காக கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து **22.11.2021** மாலை **05.45** மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதற்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் மற்றும் திருக்கோயில் இணையத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

| வ.எண். | பதவியின் பெயர் | வயது | கல்வித்தகுதி | ஒப்பந்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | **மருத்துவ அலுவலர் (Medical Officer) - 2 பதவிகள்** | 35 வயது | M.B.B.S (Qualified) Registered under TNMSE | **ரூ. 75,000/-** |
| 2 | **செவிலியர் (Staff Nurse / MLHP) - 2 பதவிகள்** | 35 வயது | DGNM (Diploma in General Nursing Midwise) | **ரூ. 14,000/-** |
| 3 | **பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் (Multi Purpose Hospital Worker / Attender) - 2 பதவிகள்** | 40 வயது | 8ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | **ரூ. 6,000/-** |

### நிபந்தனைகள்

1. இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.
2. தொற்று நோய் உடல் அல்லது மனநிலை குன்றிய குறைபாடுகள், நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள், அரசுப்பணிகள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் வேறு இடங்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
3. நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயரதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
4. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும், **22.11.2021**-ம் தேதி மாலை **05.45** மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
5. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் அந்தந்த பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதி சான்றுகள் மற்றும் இதர விவரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.
7. வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் சரிப்பார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அறிவிப்பு அனுப்பப்படும்.
8. நேரடி நியமனம் இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டவை
9. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
10. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்துச் சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். அசல் சான்றிதழ்கள் அனுப்ப கூடாது.
11. ராஜீகத்தாலும் தெய்வீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
12. விண்ணப்பங்களுக்கு கட்டணம் கிடையாது. விண்ணப்பங்களை நேரிலோ அல்லது **https://hrce.tn.gov.in** என்கிற இணையதள முகவரியில் அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர் பெயரில் உள்ள பக்கத்தில் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
13. **விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

    **உதவி ஆணையர் / செயல் அலுவலர்,**
    **அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில்,**
    **சோளிங்கர் - 631 102, இராணிப்பேட்டை மாவட்டம்.**

**இங்ஙனம்**

**திரு. பொ. ஜெயராமன், பி.எஸ்சி., பி.எல்.,**
**தக்கார் இணைய ஆணையர்,**
**இந்து சமய அறநிலையத்துறை, வேலூர்**

**திருமதி. மா. ஜெயா, பி.எஸ்சி., பி.எல்.,**
**உதவி ஆணையர் / செயல் அலுவலர்**

வெ.ஆ.எண். 62/2021/செ.ம.தொ.அ/இராணிப்பேட்டை/நாள் : 13.10.2021

" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"